டாக்டர் மு. கருணாநிதி: திரு. ரகுமான்கான் மீது டாக்டர் சமசரம் ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பியிருக்கிறார். அதையும் இப்போது எடுத்து விவாதிப்பதை நாங்களே ஆதரிக்கிறோம், அந்த உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு வழங்குகிற உரிமையை என்னிடம் விட்டு விடுங்கள். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு முன்னால் எப்படி உரிமைக் குழுவிற்கு அனுப்புவது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இதில் தாங்கள் தீர்ப்பு சொல்லிவிட்டீர்கள். நோட்டீஸ் போகவில்லை, நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் ரெடி. நோட்டீஸே எனக்குத் தேவை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2ஆம் தேதி (பிப்வரரி), திங்கட்கிழமை இது எடுத்துக்கொள்ளப்படும். அடுத்து....

4. ஒழுங்குப் பிரச்சினை—தலைமை நீதிபதி நியமனம் குறித்த கவன ஈர்ப்பு அனுமதிக்கப்பெறுவது.

*திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்போது நீங்கள் 54-வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை சபையில் எழுப்ப அனுமதி அளிக்க இருக்கிறீர்கள். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாற்றல் சம்பந்த மாக ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் போடப்பட்டு அது கான்ஸ்ட்டிட்யூஷன் பெஞ்ச்-க்கு ரெபர் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கு குறித்து விசாரிப்பதற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக் கிறது. எனவே இப்பிரச்னை குறித்து நமது மன்றத்தில் 54-வது விதியின்கீழ் விவாதிப்பது என்பது நீதிமன்றத்தின் விவகாரத்தில் தலையிடுவதாகாதா? இது சப்-ஜுடீஸ் ஆகுமல்லவா? இதே மாதிரி நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் இது ஒரு தவறான முன்மாதிரியாக இருக்காதா என்பதையும் தயவுசெய்து நீங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டு தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Thiru C. Ponnaiyan ; The subjecs-matter that is covered by the writ petition is not figured in this. So the Hon. speake may take up this issue.

திரு. என். எஸ். வி. சித்தன்: நாம் எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொள்கிறோமோ அதே பிரச்னைதான் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. உச்ச நீதி மன்றத்தினால் தடை விதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இதை அனுமதிப்பது என்பது ஒரு

1981 ஜனவரி 29] [திரு. என். எஸ். வி. சித்தன்]

தவறான முன்மாதிரியாகாதா? இது, சப்-ஜூடீஸ். ஆகவே இதைத் தாங்கள் அனுமதிப்பீர்களானால் வழக்குமன்றத்தில் உள்ள எல்லா வழக்குகள் பற்றியும் இனிமேல் 54-வது விதியின்கீழ் சபையில் கொண்டுவருவதற்கு எங்களுக்கு உரிமை வழங்க வேண்டும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்னையைப் பற்றி இந்த மன்றத்திலே, ஆளுநர் உரையின்மீது பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையை அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின்கீழ் இங்கே தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 'மாநில மொழி தெரியாத பிரதம நீதிபதிகளை மாநிலங்களில் நியமிப்பதற்கு தமிழக முதல்வரின் ஆட்சேபணையை தெரிவிக்கும் வகையில்' தமிழக முதல்வர் அவர்கள் எழுதிய கடிதம் எல்லாப பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிந்த சமாச்சாரம். அதை விவாதிப்பதில் பிரச்னை ஒன்றுமில்லை. வழக்கு மன்றத்திலே இருப்பதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, தாங்கள் தயவு செய்து இன்னும் சற்றுக் கூர்மையாகப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே இந்தப் பிரச்னை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டால், இதுமாதிரி எல்லாப் பிரச்னைகளையும் இனி நாங்கள் பேசவேண்டி வரும். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு இதை அனுமதித்தால் ——அதற்கு ஆட்சேபணை இருந்தாலும், ——நாளைக்கு இது மாதிரி பிரச்னைகள் வரும்; அனுமதி தரவேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதல்ல பிரச்னை மாண்புமிகு உறுப்பினர் 54-வது விதியின் கீழ் விளக்கம் கேட்கப் போகிறார், சொற்பொழிவிற்கு இடமில்லை. இதிலே, மொழி தெரியாத தலைமை நீதிபதி வேண்டாம் என்பதுதான் கேள்வி. அதுவும், இதைப்பற்றி பத்திரிகைகளிலே ஏற்கனவே பூராவும் விவாதித்திருக்கிறது. மன்றம் விவாதிப்பதினால் ஒரு விளைவும் புதிதாக ஏற்படப் போவதில்லை. ஆகவே, இதை மன்றம் விவாதிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்; மொழி தெரியாத தலைமை நீதிபதி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதிக்கலாம் என்று நான் தீர்ப்பு கொடுத்திருக்கிறேன். திரு. உமாநாத்.

5. கவன ஈர்ப்பு.

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல்

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, 54-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.